1981 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** சம்பந்தப்பட்ட அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ** ** நான் சொன்னது உட்பட அனைத்தும் நீக்கப்படுகிறது.

எட்டயபுரத்தில் கூட்டுறவு நூற்பாலை நிறுவும் திட்டம்.—

* வினா எண். 560—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரத்தில் கவி சுப்பிரமணிய பாரதியார் பெயரில் பாரதி கூட்டுறவு நூற்பாலை ஒன்று நிறுவ தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதுபற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) (ஆ) திருநெல்வேலி பேட்டையிலுள்ள தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை எட்டய புரத்தில் ஒரு கிளை நூற்பாலை நிறுவ உத்தேசித்துள்ளது.

இந்த கிளை ஆலையில் 12,000 கதிர்கள் நிறுவப்பட்டு செயற்கை நூல் இழைகள் உற்பத்தி செய்யப்படும். இதற்கு ஆகும் மூலதனச் செலவு ரூபாய் மூன்று கோடி. சுமார் 400 நபர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சென்ற மானியக் கோரிக்கையின் போது தெரிவித்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டு எட்டய புரத்திலே கூட்டுறவு நூற்பாலையை அமைப்பதற்காக அரசுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டுறவுத் நூற்பாலைக்கு பாரதியார் பெயர் வைக்க வேண்டுமென்று அரசு ஏதாவது முடிவு எடுத்திருக்கிறதா? அந்த ஆலை எப்போது செயல்படும் என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்பாலையின் கட்டுமானப் பணிகள் அடுத்த ஆண்டிலே துவங்கப்படும். யாருடைய பெயரையும் கூட்டுறவு நூற்பாலைக்கு வைப்பதில்லை, கூட்டுறவு நூற்பாலை என்ற

** மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

பெயரில்தான் அந்த அந்த மாவட்டங்களிலே கூட்டுறவு ஆலைகள் இருக்கின்றன. எனவே அதைப் போன்ற பரிசீலனை இப்போது இல்லை. பாரதியினுடைய நினைவாகத்தான் அது எட்டய புரத்திலே துவங்கப்பட்டிருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பாரதியார் நினைவாக கூட்டுறவு நூற்பாலை ஆரம்பிக்கப் போவதாகச் சொன்னார்கள். பாரதியார் நினைவாக ஆரம்பிக்கப்படுகிற ஆலைக்கு பாரதியினுடைய பெயரையும் சூட்டுவதற்கு இன்னும் சொல்லப் போனால் தேசிய கவி என்ற பெயரைச் சூட்டுவதற்கும் அரசாங்கம் அதை மறுபரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : எட்டயபுரம் என்றாலே பாரதியாருடைய நினைவு நமக்குநினைவுக்கு வரும். எனவே அவருடைய நினைவாக அமைக்கப்படுகிறது. தனியாக பெயர் தேவையில்லை.

தமிழ்நாட்டிலிருந்து ஆந்திரத்திற்கு கல்லுடைக்கச் செல்லும் தொழிலாளர்கள்.

* வினா எண். 561—திருமதி த. இராசாம்பாள் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா -

(அ) தமிழ்நாட்டிலிருந்து ஆந்திராவிற்கு கல்லுடைக்கச் செல்லும் ஏழைத் தொழிலாளர்கள் ஆள் பிடிக்கும் கருங்காலி களால் காண்ட்ராக்டர்களிடம் அடகு வைக்கப்படுகிறார்கள் என்பது இந்த அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இப்படி மோசடிக்கும் கொத்தடிமைக்கும் ஆளாக்கப் படும் பாமர மக்களை விடுவித்து மீட்டுவர அரசு நடவடிக்கை எதுவும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். விஜயசாரதி : (அ) தமிழ் நாட்டிலிருந்து ஆந்திராவிற்கு கல்லுடைக்கச் செல்லும் ஏழைத் தொழிலாளர்கள் ஆள்பிடிக்கும் கருங்காலி காளல் காண்ட்ராக்டர்களிடம் அடகு வைக்கப்படுகிறார்கள் என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

(ஆ) இப்படி மோசடிக்கும் கொத்தடிமைக்கும் ஆளாக்கப் படும் மக்களை விடுவித்து மீட்டுவர இந்த அரசு ஆந்திர அரசுடன் தொடர்பு கொண்டு இது குறித்து விரிவான விசாரணை நடத்தி அறிக்கை அனுப்புமாறு ஆந்திர அரசிடம் கேட்டுக் கொண்டு உள்ளது.